★ மேற்கு நாட்டு தூதரகங்களுக்கு மகஜர் அனுப்பப்பட்டது

# பண்டிவிரிச்சான் குண்டுவீச்சை ஆட்சேபித்து பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

சிங்கள அரசபடையின ரால் கடந்த 9ஆம் திகதி மன்னார் பண்டிவிரிச்சான் பாடசாலையில் க.பொ.த. சாதாரண பரீட்சை நடந்து கொண்டிருந்தபோது கண் மூடித்தனமான விமான குண்டுவீச்சுத் தாக்குதல் களைக் கண்டித்தும், தமிழர் மீது திணிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடை யினை நீக்கக்கோரியும், 91ஆம் ஆண்டு நடைபெற இருந்த க.பொ.த. உயர் தரப்பரீட்சையினை நடாத் தக்கோரியும் யாழ் நகரில் பல்கலைக்கழக மாணவ மாணவியர்கள் எழுச்சிக் கோஷங்களைஎழுப்பி ஆர்ப் பாட்ட ஊர்வலத்தினை நடாத்தினர். நேற்றுக் காலை 9.15 மணியளவில் யாழ் பல்கலைக்கழக முன்ற லில் ஆரம்பமாகிய ஆர்ப் பாட்ட ஊர்வலம் பலாலி வீதி, இராமநாதன் வீதி, கஸ் தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக 11.15மணியள வில் யாழ் செயலக முன் றலையடைந்தது. இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக் கான மாணவர்கள் பங்கு பற்றினர். பின்னர் மாண வரவைத்தலைவர் செல்வன் ஈ. இளம்பிறையனினால்

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 - 00

முரசொலி

முரசு 06 ஒலி 22 பிரசோற்பத்தி மார்கழி 04 (19-12-1991) வியாழன்

## பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச. கிளையில் தேங்காய் எண்ணெய் அளவில் மோசடி

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் பங்கீட்டுக்கு வழங் கப்பட்ட தேங்காய் எண்ணெயின் அளவில் இடம்பெற்று வந்த மோசடி ஒன்று மேற் படி கிளைக் குழுத் தலைவர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டது. குறிப்பிட்ட அளவிலும் பார்க்க சிறிய அளவிலான கருவி மூலம் தேங்காய் எண்ணெய் பாவனையாளருக்கு வழங்கப் படுவதாக கிடைத்த புகாரை அடுத்து கிளைக்குழுத் தலைவர் ஏனைய உறுப்பினர்கள் சகிதம் மேற்படி கிளைக்கு திடீரெனச் சென்று பரிசோதித்த போது இந்த மோசடி கண்டு பிடிக்கப்பட்டது. இதனை அடுத்து சங்கக் குறைபாட்டுப் புத்தகத்தில் (லொக் புக்) முறைப்பாடு எழுதப்பட்டு தலை மைச் சங்க பொதுமுகாமையாளருக்கும் இதுபற்றித் தகவல் அனுப்பி வைக்கப்பட்டது. உடனடியாக சரியான அளவுக் கருவி பெறப்பட்டு அதன்

—04 ஆம் பக்கம் பார்க்க

# அரசின் யுத்த நிறுத்த யோசனையை இராணுவம் ஏற்க மறுப்பு!

நத்தார், புதுவருட பண்டிகை காலத்தையொட்டி இருநாள் யுத்த நிறுத்தத்தை கடைப் பிடிக்க அரசு திட்டமிட்டுள்ளதாகவும் புலிகளும் அக்காலத்தில் தாக்குதல் நடத்தாவிடின் யுத்த நிறுத்தத்தை நீடிப்பது குறித்து யோசிக்கலாம் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார். ஆனால் இந்த யுத்த நிறுத்த யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது என இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களி டையே பேசிய அமைச்சர் ரணில், "பண்டிகைக் காலத் தில் நத்தார் தினத்தை யொட்டி இரு நாள்களுக்கு யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடிக்கலாம். இக் காலத்தில் விடுதலைப் புலிகளும் தாக்கு தல் ஏதும் நடத்தா விட் டால் அரச படைகளும் இரா ணுவ நடவடிக்கைகளை மேற் கொள்ளாது என்றார்.

இது வழமையான ஒரு நட வடிக்கையே எனக் கேள்வி ஒன்றுக்கும் பதிலளித்த அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆனால் இதேவேளை இரா ணுவத் தலைமையகத்தில் செய்தியாளர்களிடையேபேசிய இராணுவப் பேச்சாளர் ஒரு வர், "புலிகளுடனான யுத்த நிறுத்த யோசனையை ஏற்க முடியாது என நிராகரித் தார்."

யுத்த நிறுத்தம் கடைப் பிடிக்கப்பட்டால் அக்காலப் பகுதியில் புலிகள் தம்மை

—04 ஆம் பக்கம் பார்க்க

## நாகராஜனை பிணையில் விட நீதிபதி மறுத்துவிட்டார்

தமிழக உள்துறை செயலர் ஆர். நாகராஜனால் சமர்ப் பிக்கப்பட்டபிணை மனு நீதி பதியால் நிராகரிக்கப்பட்டுள் ளது.

நாகராஜன் பாரிய குற்றத் தினை புரிந்ததைக் கருத்திற் கொண்டே அவரை பிணை

## மறைத்து வைக்கப்பட்ட நகை

சார்க் மாநாடு

## பிரேமா - ராவ் பேச்சுநடத்துவர்

நாளை மறுதினம் கொழும் பில் நடைபெறும் ஒரு நாள்

## ஒருவார சினைப்பர் தாக்குதலில் 19 படையினர் பலி

நேற்று முன்தினம் இடைக் காடு காவலரண் படையினர் மீது விடுதலைப்புலிகள் குறிபார்த்து சுட்டதில் ஒரு சிப்பாய் பலியானார்.

கடந்த ஞாயிறன்று இடைக் காடு காவலரணில் நின்ற படையினர் மீது புலிகள் சினைப்பர் தாக்குதல் நடாத் தியதில் 3 படையினர் பலி யாகினர்.

கடந்த ஒரு வாரத்தில் மட் டும் பலாலிப் பகுதியில் 19 படையினர் சினைப்பர் தாக் குதலுக்கு பலியாகியுள்ளனர்.

## தாக்குதல் நடத்தியவர்களைத் தேடி திருமலையில் 'ஒபரேஷன் மூன்லைட்'

கடந்த இரு தினங்களாக திருகோணமலையில் மேற் கொள்ளப்பட்ட ஒபரேஷன் மூன்லைட் இராணுவநடவடிக் கை நிறுத்தப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

சில வாரங்களுக்கு முன்னர் வெல்லாங்குளம் விமானப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா ஆஸ்பத்திரியில் டாக்டர்களுக்கு தட்டுப்பாடு

வவுனியா அரசினர் ஆஸ்பத் திரியில் வைத்தியர்களுக்கும் ஊழியர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படு மாறு அண்மையில் இங்கு வந்த அமைச்சர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதற்கு ஆண்டு

திளை புரிந்ததைக் கருத்திற் கொண்டே அவரை பிணையில் விடுவிக்க முடியாது என நீதிபதி தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறும் ஒரு நாள் சார்க் மாநாடு மாலை 5 மணி

— 04 ஆம் பக்கம் பார்க்க

ஊழியர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் குறைபாடுகளை நீக்கு

தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் பயிற்சியை

—04 ஆம் பக்கம் பார்க்க

## மறைத்து வைக்கப்பட்ட நகை மாயமாக மறைந்துள்ளது

அச்சுவேலி - வாலாவளை என்ற இடத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து பாதுகாப்புக்காக மறைத்து வைக்கப்பட்ட மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நகை மாயமாக மறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வீட்டு உரிமையாளர், தமிழீழ காவல்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பூநகரி - மண்டைதீவு கடலில் கைதானவர்கள் விடுவிக்கப்படவில்லை

கடந்த மாதமுற்பகுதியில் மண்டைதீவு கடற்பரப்பிலும் பூநகரி பள்ளிக்குடா கடற்பரப்பிலும் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட குருநகர்ப்பகுதியைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் இன்று வரையில் விடுவிக்கப்படாது படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

—04 ஆம் பக்கம் பார்க்க

★ பாரிஸ் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டினால்

# அரச படைகள் தொடர்பான மன்னிப்புச்சபை சிபார்சுகளை ஏற்பதாக அரசு உறுதி

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினர் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை அரசுக்கு சமர்ப்பித்துள்ள சிபார்சுகளின் விவரங்களை ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்று வெளியிட்டார். இது தொடர்பாக அரசின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் அவர் விளக்கியுள்ளார்.

''இலங்கை வடக்குகிழக்கு ஆயுததளத்தில் மனித உரிமை மீறல்கள்'' என்ற தலைப்பில் மன்னிப்புச் சபை அரசபடைகள் தொடர்பாக 32 சிபார்சுகளை தெரிவித்துள்ளது.

இவற்றை நடைமுறைப்படுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும் பிரட்மன் குறிப்பிட்டார்.

மன்னிப்புச்சபையின் சிபார்சுகளில் ஒன்று கடந்த ஏழு

—04 ஆம் பக்கம் பார்க்க

அரசியல் அவதானிப்புகள்:

## தமிழகத்தில் பாரதிய ஜனதாக் கட்சி

- எஸ். ஜி. எம்.

தமிழீழ போராளிக் குழுக்களுக்கு ஆதரவளித்தது தொடர்பான விசாரணைகள் 1981ஆம் ஆண்டு முதல் இருந்து நடாத்தப்பட வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சி கோரியுள்ளமை பற்றியும்;

அக்கட்சி தமிழகத்தில் ஆட்சி அமைக்கக் கூடிய நிலைமை இந்த விசாரணைகளின் செயற்பாடுகள் ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தலாம் என்றும் இந்தப் பகுதியில் முன்பு எழுதப்பட்டது இந்த அரசியல் சாத்தியம் பற்றிய ஊகம் சரியானது என்பதை டிசம்பர் 6 ஆம் திகதி வெளிவந்த 'புறன்ட்லைன்' கட்டுரையொன்று நிரூபிக்கிறது

இக்கட்டுரையின்படி அனைத்திந்திய அண்ணா தி மு க வின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான வலம்புரி ஜோன் 'ராஜசிறி' என்ற பெயரில் ஒரு வாராந்தச் சஞ்சிகையை ஆரம்பித்து அதில் முதல்வர் ஜெயலலிதாவின் உண்மைக் கதையைத் தொடராக எழுதப் போவதாக அறிவித்தார் இதைத் தொடர்ந்து இச்சஞ்சிகையின் வெளியீட்டுக்கு எதிராக முதல்வர் ஜெயலலிதா ஓர் இடைக் காலத் தடையுத்தரவைப் பெற்றிருந்தார். இதே நேரம் சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் அப்பொழுது வெளியிடப்படாதிருந்த சஞ்சிகை நீதித்துறையைச் சிறுமைப்படுத்துவதாகவும் சமூக அமைதியின்மையை ஏற்படுத்திச் சமாதானத்தைச் சீர்குலைக்கும் என்றும் ஓர் ஊகப் புகாரைத் தாக்கல் செய்திருந்தார். இதைத் தொடர்ந்து அந்த வெளியிடப்படாத ராஜசிறியின் வாராந்த வெளியீடு நீதிமன்ற உத்தரவின் பேரில் கைப்பற்றப்பட்டது.

உண்மையில் இக்கைப்பற்றப்பட்ட சஞ்சிகையின் முற்பக்க விடயம் இந்து இனவாதத்திற்கும் எதிராக அமைந்ததோடு மத சார்பின்மையையும் வலியுறுத்துவதாகவே இருந்தது அதிமுக்கியமாக தமிழகத்தில் மிக மிகக் குறைந்த முக்கியத்துவத்தையே பெற்றிருந்த பாரதிய ஜனதாக் கட்சி தமிழக ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஓர் பத்து அம்சத் திட்டத்தைத் தயாரித்திருந்தது பற்றியும்;

இந்து முன்னணியினர் தற்பொழுது சென்னையில் சாந்தோம் கதீட்ரல் இருக்குமிடத்தில் முன்பு ஓர் இந்து ஆலயம் இருந்தது என்ற கருத்தை முன் வைத்தது பற்றியும் எழுதப்பட்டிருந்தது.

இந்த விடயங்கள் பாரதிய ஜனதாக் கட்சி தமிழக ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஏற்கனவே திட்டமிட்டதையும், அயோத்தியில் பாபர் மசூதி இருக்கும் இடத்தில் இராமர் ஆலயம் இருந்தது என்றும் அந்த மசூதியை இடித்து இராமர் ஆலயமொன்றைக் கட்ட வேண்டுமென்ற கோரிக்கைக்கும் இணையானவையாகும்.

அங்கே விஸ்வ இந்துப்பரிசத் முஸ்லிம் மசூதிக்கெதிராகப் போராட்டம் நடத்த இங்கே தமிழகத்தில் இந்து முன்னணி என்ற அமைப்பு மூலம் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு எதிராக போராட்டம் நடத்துவதற்கு முற்படுவது தெரிகிறது இந்த இரண்டு மதவாத அமைப்புகளின் பின்னணியிலும் பாரதிய ஜனதாக் கட்சியே செயற்படுவது வெளிப்படை.

தமிழகத்தைப் பொறுத்தவரை பாரதிய ஜனதாக் கட்சி தனது அடிப்படை மதவாதக் கொள்கையை உட்புகுத்தி, வட இந்தியாவில் எவ்வாறு தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டு வருகிறதோ அவ்வாறே இங்கும் செயற்பட முனைந்திருப்பது தெரிகிறது.

மேலும் பி. ஜே. பி. கட்சித் தலைவர் டாக்டர் முரளி மனோகர்ஜோசி தமது கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலான 'ஒற்றுமை யாத்திரையை' இம்மாதம் 11 ஆம் திகதி கன்னியாகுமரியில் ஆரம்பித்துள்ளார். இந்த யாத்திரை அயோத்தி ஊடாகக் காஷ்மீரைச் சென்றடையுமோ இல்லையோ முழுத் தமிழகத்தின் ஊடாகச் செல்லவே செய்யும்.

# அகதி முகாம்களுக்கு வெளியே வசிப்போருக்கு இனி இலவச நிவாரணம் இல்லை!

## பாராளுமன்றத்தில் அமைச்சர் அறிவிப்பு

அகதி முகாம்களுக்கு வெளியில் வசிக்கும் இடம் பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவுப் பொருள் நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

அகதிகளுக்கு இலவசமாக உலர் உணவுப் பொருள்களை வழங்குவதினால் அரசுக்குப் பெரும் செலவு ஏற்படுவதாகவும் கடந்த ஆகஸ்ட் மாதம் வரை இதற்கென 320 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு அமைச்சர் தயாரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ளோருக்கு இனி எக்காரணம் கொண்டும் இலவச நிவாரணம் வழங்கப்பட மாட்டாது எனவும் அமைச்சர் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

## வடக்கில் பாரிய தாக்குதல் தொடங்கும் என்கிறது 'தினகரன்'

வடக்கில் புதுவருடத்திற்கு முன்னர் பெரும் தாக்குதலொன்று ஆரம்பிக்கப்படலாமெனக் கொழும்பிலிருந்து வெளிவரும் 'தினகரன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது குறித்து குடிமக்களை எச்சரிக்கும் ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் விமானத்திலிருந்து கடந்த வார இறுதியில் போடப்பட்டதாகவும் இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

எந்த நேரத்திலும் தாக்குதல் தொடரலாமென இராணுவ உயரதிகாரியொருவர் தெரிவித்ததாகவும் 'தினகரன்' செய்தி கூறுகிறது.

## ஆறுதினங்களாகத் தொடர் மழை; மட்டுநகரில் 35 ஆயிரம் பேர் அகதிகளாக!

மட்டக்களப்பில் கடந்த ஆறு தினங்களாகப் பெய்து வரும் கடும் மழையினால் 35 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சுமார் நாலாயிரம் வீடுகள் பெருமழை பெருவெள்ளங்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு பாடசாலைகளிலும் வீடுகளிலும் தங்கியுள்ளனர்

## சுகாதாரத்திணைக்கள ஊழியர்க்கு சீருடை கிடைக்கும்

யாழ் சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோக பூர்வ சீருடையைப் பெற உரிமையுடைய ஊழியர்களுக்கு 1992 ஆம் ஆண்டுக்கான சீருடைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

சீருடை பெறும் தகுதியுடைய சகல ஊழியர்களின் விவரங்கள் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று சுகாதாரப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (13)

## 449 தோட்டங்களைப் பெற 120 நிறுவனங்கள் போட்டி

மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, ஸ்ரீலங்கா அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் பராமரிப்பிலிருந்த 449 பெருந் தோட்டங்கள் அடுத்த வருட நடுப்பகுதியில் தனியாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இத் தோட்டங்கள் 22 நிறுவனங்களிடம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன

ஆனால் இவற்றைப் பொறுப்பேற்று நடாத்துவதற்கு 120 உள்ளூர், வெளியூர் நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன.

## ஜனவரி முதல் தலைக்கவசம்

மோட்டார் சைக்கிள் ஓட்டிகளும், அதில் பயணம் செய்வோரும் தலைக்கவசம் அணிவது அடுத்த வருடம் ஜனவரி முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும் குழந்தைகளும் தலைக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

முன்னர் தலைக்கவசம் அணிவது சட்ட மூலம் கட்டாயமாக்கப்பட்டிருந்தமையும் பின்னர் அது நீக்கப்பட்டிருந்தமையும் தெரிந்ததே.

## கார்க் கொள்ளை

கஹெறா வாகனக் கடத்தல், கொலைகள் தொடர்பாக விசாரணைகள் நடைபெறும் போதே பொலிஸ் பகுதிக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

## போலி பாஸ்போட் தயாரித்த மூன்று இலங்கையர் கைது!

இப்போது
உங்களுக்கு
அண்மித்துவிட்டோம் - ஆம்!

யாழ் நகரின் மத்தியில்
ஓர்

முரசொலி
விளம்பர கருமபீடம்

உங்கள்
பிறந்ததின வாழ்த்துக்கள்
திருமண அழைப்புக்கள்
மரண அறிவித்தல்கள்
நினைவஞ்சலிகள்
பொருள்கள் வாங்கல் விற்றல்
வர்த்தக விடயங்கள்
போன்ற எல்லா விளம்பரங்களும்

இல. 484/1 ஆஸ்பத்திரி வீதியில்
அமைந்துள்ள

சிலோன் மேர்ச்சன்ஸ் கட்டடம்

...சென்றடையுமோ இல்லையோ முழுத் தமிழகத்தின் ஊடாகச் செல்லவே செய்யும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை திராவிட பாரம்பரியத் திற்கும் அதிலும் குறிப்பாகத் தமிழீழப் போராட்டத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிராகவும் எழுதிவரும் இந்து, தினமலர் போன்ற பத்திரிகைகளும், துக்ளக், தராசு போன்ற சஞ்சிகைகளும் பார்ப்பன ஆதிக்கம் கொண்டவை என்பதும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும், இவை போன்ற பத்திரிகைகள் பி ஜே பி யின் அடிப்படை மதவாதக் கொள்கைகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரிக்கவே செய்யும்.

மாறி மாறித் தமிழக ஆட்சியைக் கைப்பற்றிய தி.மு.க மற்றும் அண்ணா தி.மு.க. ஆகிய கட்சிகள் கூடுதலான சந்தர்ப்பங்களில் இந்திரா காங்கிரசுடன் கூட்டு வைத்துக் கொண்டே வெற்றி பெற்றிருக்கின்றன.

இந்திரா காங்கிரஸ் கூட தனித்துப் போட்டியிடுவதிலும் பார்க்க இரண்டில் ஒரு திராவிட பாரம்பரியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதைத் தமக்குச் சாதகமானது என்ற கொள்கையையே கடைப்பிடித்து வந்துள்ளது.

4 ஆம் பக்கம் பார்க்க

# மூன்று இலங்கையர் கைது!

போலி பிராங்ஸ் பாஸ் போர்ட்டுக்களை தயாரித்த மூன்று இலங்கையர்கள் பாண்டிச்சேரியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த போலி பாஸ்போர்ட்டுடன் பிரான்ஸ் சென்ற ஒருவர் கடந்த மாதம் பாரிஸில் வைத்துக் கைது செய்யப்பட்டு சென்னைக்குத் திருப்பி அனுப்பப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாண்டிச்சேரியில் வசிக்கும் பிரான்ஸ் குடிமக்களின் பாஸ்போட்டுக்களை வாங்கி அவற்றில் புகைப்படங்களை மாற்றி போலி பாஸ்போட்டுக்களை இவர்கள் தயாரித்தார்களெனவும் தெரிவிக்கப்பட்டது.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வலிகாமம் மேற்கு விவசாயிகளுக்கு அரிய சந்தர்ப்பம் உங்கள் அபிமான 'நீமியா' இயற்கை உரம் சங்கானை ப.நோ.கூ. சங்கக் கிளைக் கடைகளிலும், அராலி, கொட்டைகாடு சிவஐங்கரன் ஸ்ரோசிலும் கிடைக்கிறது 'மில்க்வைற்'

12055

சிலோன் மேர்ச்சன்ஸ் கட்டிடம்

முதலாம் மாடியில்

முரசொலி விளம்பர கருமபீடத்தில்

நியாயமான கட்டணத்துடன்

ஏற்றுக்கொள்ளப்படும்

முரசொலியில் விளம்பரம்

முன்னேற்றத்தின் திறவுகோல்

A 12052

# பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம்

## அமைச்சர் தொண்டாவின் ஆலோசனைகள்!

இனப்பிரச்சினைக்கு சமரசத் தீர்வு காண்பது குறித்த அமைச்சர் தொண்டமானின் ஆலோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த ஆலோசனைகளின் விவரங்களை இங்கு தருகிறோம்.

### சுயாட்சி அமைப்பு

வட, கிழக்கு இணைந்த பிரதேசத்துக்கு சுயாட்சி அமைப்பு ஒன்றை ஏற்படுத்தல். சுயாட்சி அமைப்பின் சம்மதம் இன்றி வட-கிழக்கு எல்லைகள் மாற்றப்படக் கூடாது.

### ஆளுநர்

சுயாட்சி அமைப்பின் முதலமைச்சரின் சிபார்சின் பேரில் ஆளுநர் ஒருவரை ஜனாதிபதி நியமிப்பார். அவர் ஜனாதிபதியின் விருப்பத்திற்கு அமைய 5 வருடங்கள் பதவி வகிப்பார்.

### முதலமைச்சர்

சுயாட்சி அமைப்புக்கு நடக்கும் பொதுத் தேர்தலில் பெரும்பான்மை ஆதரவைப் பெறும் உறுப்பினர்கள் பெற்ற கட்சியின் தலைவர் முதலமைச்சராக நியமனம் பெறுவார். தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் அரைவாசிப் பேருக்கு மேல் ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இல்லையெனில், பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு எவருக்கு உண்டு எனக் கருதுகிறாரோ, அவரை முதலமைச்சராக ஆளுநர் நியமிப்பார்.

### அமைச்சரவை

முதலமைச்சர் தலைமையில் அமைச்சரவை ஒன்று இருக்கும். முதலமைச்சரின் சிபார்சின் பேரில், ஆளுநர் சுயாட்சி அமைப்புக்கு அமைச்சர்களை நியமிப்பார். இந்த அமைச்சரவையில் 10 அமைச்சர்கள் அங்கம் வகிப்பார்கள். இந்த அமைச்சரவை சட்டப் பொறுப்பாக இயங்கும். முதலமைச்சரினால் சமர்ப்பிக்கப்படும் சட்டவிடயங்களில் சட்டத்தரணிநாயகம் சுயாட்சி அமைப்புக்கு ஆலோசனை வழங்குவார்.

### செயலகம்

சுயாட்சி அமைப்புக்குத் தனியாக ஒரு செயலகம் இருக்கும். அதிகாரிகள் நியமனங்கள் சம்பந்தமான நிபந்தனைகளையும் விதிமுறைகளையும் இச் செயலகம் வகுக்கும்.

### பிரதம செயலாளர்

முதலமைச்சரின் சிபார்சின் பேரில் சுயாட்சிஅமைப்புக்கு பிரதம செயலாளர் ஒருவர் ஆளுநரால் நியமிக்கப்படுவார், இதேபோன்று மற்ற செயலாளர்களும் நியமிக்கப்படுவர்.

### நீதித் துறை

மேல்நீதிமன்ற நியமனத்துக்கு நீதிபதியாக நியமனம் பெறத் தகைமை கொண்ட ஒருவர் முதலமைச்சரின் ஆலோசனையுடன், சுயாட்சி அமைப்புக்குச் சட்டத்தரணியாக ஆளுநரால் நியமிக்கப்படுவார்.

### நீதிச் சேவை ஆணைக்குழு

வட கிழக்கு மாகாணத்திற்கு நீதிச் சேவை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும். வட கிழக்கில் உள்ள மாவட்ட நீதிமன்றங்கள், நீதவான் நீதிமன்றங்கள், ஆரம்ப நீதிமன்றங்கள், மன்றுகள் மற்றும் நீதி நிர்வாக அமைப்புக்குழுக்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் இந்த ஆணைக்குழுவினால் பரிபாலிக்கப்படுவர்.

### அதிஉயர் நீதிமன்றம்

வட. கிழக்கு மாகாணத்தின் அதி உயர் நீதிமன்றமாக மேல் நீதிமன்றம் இருக்கும். கீழ் நீதிமன்றங்கள் போன்றவற்றில் இருந்து வரும் மேன்முறையீடுகளைப் பரிசீலிக்கும் அதிகாரத்தை இந்த மேல் நீதிமன்றம் கொண்டிருக்கும்.

### பிரதம நீதியரசர்

மாகாண முதலமைச்சரின் சிபார்சின் பேரில் வட,கிழக்கு மேல் நீதிமன்றத்திற்குப் பிரதம நீதியரசர் ஒருவரை ஜனாதிபதி நியமிப்பார்.

நீதிச் சேவை ஆணைக்குழுவானது பிரதம நீதியரசரைத் தலைவராகவும், மேல் நீதிமன்றின் வேறு இரு நீதிபதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டிருக்கும்.

(வளரும்)

# மணவீடோ, பிணவீடோ

## பொலிஸாருக்கு தகவல் அவசியமாம்

மணவீடோ, பிணவீடோ வேற்று ஊரார் யாராவது இவ் வீடுகளுக்கு வரின் அவர்கள் பற்றிய விவரங்களை உடன் தெரிவிக்க வேண்டும்

இவ்வாறு வலயப் பகுதியில் வசிக்கும் தமிழ் மக்கள் பொலிஸாரினால் பணிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நடைமுறையை மீறுவோர் தண்டிக்கப்படுவர் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளதாம்.

# ஊனமுற்ற ஐவருக்கு முச்சக்கர வண்டிகள்!

கிளிநொச்சி மாவட்டத்தில் கால் ஊனமுற்ற ஐவருக்கு கிளி- அரச செயலகத்தினால் முச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

வடக்குக் கிழக்கு மாகாண சபையினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்த முச்சக்கர வண்டிகளில் இரண்டு கிளி-உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், இரண்டு பூநகரி உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், ஒன்று பளை உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவருக்கும் வழங்கப்படவுள்ளன.

# 'சோவியத் யூனியன்' கூட்டு

# ஜனவரியுடன் கலைகிறது!

சோவியத் ரஷ்யாவின் 'சோவியத் யூனியன்' என்னும் அமைப்பு இவ் வருட இறுதியுடன் ரத்துச் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவும், ரஷ்ய ஜனாதிபதி எல்சனும் இது குறித்து கூட்டாக அறிவித்துள்ளனர்.

புத்தாண்டு தினத்தன்று புதிய 'சாமன் வெல்த்' என்ற அமைப்பு அறிவிக்கப்படவுள்ளதாகவும், தலைநகரிலுள்ள சிவப்புப் பின்னணியைக் கொண்ட அரிவாளும் சுத்தியலும் கொண்ட கொடி இறக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

74 ஆண்டுகாலக் கூட்டு இப்போது சிதைவுற்று வருவதையடுத்தே ரஷ்யத் தலைவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

# 'எம் காவிரி எமக்கே சொந்தம்'

## கோரிக்கை வலுக்கிறது!

கர்நாடக மாநிலத்தில் தமிழர்கள் மீதான தாக்குதல்களைத் தடுக்க இராணுவத்தைப் பயன்படுத்துமாறு மத்திய அரசைத் தமிழக முதல்வர் ஜெயலலிதா மீண்டும் கோரியுள்ளார்.

பரா இராணுவ அணியொன்று கர்நாடகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் அது செயற்படக் கர்நாடக அரசு தடையாக உள்ளதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை காவிரி நீர் எமக்கே உரியது. அதன் பலனை அனுபவிக்கத் தமிழக மக்களுக்கு உரிமை இல்லை என்னும் கருத்துக்களை வலியுறுத்தும் பல சுவரொட்டிகள் கர்நாடகத்தில் ஒட்டப்பட்டுள்ளன.

## முப்பெரும் விழாக் காணும்

# யாழ் ஆயர்



யாழ் ஆயர் (Bishop) யார் ? என்ற வினாவிற்கு இலங்கையின் மூலை முடுக்கெங்கினும் உள்ள படித்தவன் முதல் பாமரன் வரை சட்டெனக் கூறும்பதில்... "தியோகுப்பிள்ளை." அந்தளவிற்கு இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் பிரபல்யமானவர் யாழ் மறை மாவட்ட (யாழ், கிளி, முல்லை மாவட்டங்களை உள்ளடங்கிய பிரதேசம்) கத்தோலிக்கரின் தலைமை ஆதீனமாக விளங்கும் கலாநிதி பேரருட் திரு 'வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள்.

கம்பீரமான உடலமைப்பும், கணீர்க்குரலுமுடைய இக் கத்தோலிக்க கிறிஸ்தவ துறவிக்கு இவ்வாண்டு இறுதியிலிருந்து அடுத்த வருட முற்பகுதி வரையிலான காலப்பகுதி பெருமித மூட்டும் நாள்களாகும்.

1917 - 04 - 09 அன்று கரம்பொன் கிராமத்தில் (மறைந்த பேரருட் திரு.எமிலியானஸ் பிள்ளை, மற்றும் ஒய்வு பெறும் பேரருட்திரு அன்ரனி, பேரருட் திரு. தியோகுப்பிள்ளை, மட்டு. திருமலை ஆயர் பேரருட்திரு. கிங்ஸிலி சுவாம்பிள்ளை, மன்னார் ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆகிய இலங்கையின் ஐந்து தமிழ் ஆயர்களும் கரம்பொன் கிராமத்தையே சேர்ந்தவர்களென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.) பிறந்த பேரருட் திரு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் தனது 75-வது பிறந்தநாள், குருவாகத் துறவறம் பூண்ட 50 வருட பூர்த்தி. ஆயராகத் தலைமைத்துவத்தை ஏற்ற 25 வது வருட நிறைவு ஆகியவற்றை இக் காலப்பகுதியில் அமைதியாகக் கொண்டாடுகிறார்.

> இன்று காலை 8.30 மணிக்கு யாழ் மரியநாயகி பேராலயத்தில் யாழ் ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையின் குருத்துவப் பொன் விழாவும், மற்றும் ஐந்து குருக்களின் குருத்துவ வெள்ளி விழாவும் கூட்டுத் திருப்பலி மூலம் நினைவு அமைதியாகக் கொண்டாடப்படுகிறது.

சிறந்த உதைபந்தாட்ட வீரனான ஆண்டகை இத்தாலியில் குருத்துவ உயர்கல்வி பயின்று அனுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரி (யாழ் மறைமாவட்டத்துள் அநுராதபுரம் உள்ளடக்கப்படிருந்த காலம்), இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, கரவெட்டி திரு இருதய ஆண்டவர் கல்லூரி, கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் அதிபராகவும் கடமை புரிந்து அரும் பெரும் கல்விப்பணியாற்றியுள்ளார்.

இலங்கையின் இரண்டாவது தமிழ் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட பேரருட் திரு. தியோகுப்பிள்ளை அவர்கள் ஆரம்பத்தில் மட்டு - திருமலையில் பணியாற்றிப் பின்னர்

★ எப். கிறிஸ்ரி ரஞ்சன்

இலங்கையின் முதல் தமிழ் ஆயராகிய காலஞ்சென்ற பேரருட் திரு எமிலியானஸ்பிள்ளை அவர்களின் மறைவிற்குப் பின்னர் யாழ் ஆயராகப் பதவியேற்றார்.

மன்னார் மாவட்டம் தனி மறை மாவட்டமாக உருப்பெறவும், தமிழ்க் குருக்கள் சொந்த மண்ணில் தமிழ்ப் பண்பாடுகளுக்கமைய உருவாக்கப்பட- (முன்னர் குருக்கள் மெய்யியல், இறையியல் கல்வியைக் கண்டியிலும் இந்தியாவிலுமே பயில வேண்டிய நிலை இருந்தது) கொழும்புத்துறையில் குருத்துவ உயர் கல்லூரியையும் உருவாக்க முன்னின்று உழைத்தவர்.

சமூக நிகழ்வுகளில் நீதிக்காக உழைத்து தமிழரின் சுய உரிமைகளை வலியுறுத்திய பேரருட் திரு. தியோகுப்பிள்ளை அவர்கள் போராளிகளை "எமது பையன்கள்" எனக்குறிப்பிட்டதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பலத்த விமர்சனத்திற்கு உள்ளாகி இருந்தவர்.

இலங்கை இந்திய இராணுவக் கெடுபிடிகளின்போது தமிழர்களின் இன்னல்களுக்காக, நீதிக்காக குரல் எழுப்பியவர் ஆயர் பெரும்பாலும் வயதின் அடிப்படையில் அடுத்த வருட நடுப்பகுதியில் தமது பதவியில் இருந்து ஓய்வு பெறக் கூடுமென பலத்த ஊகம் நிலவுகின்றது.

ஆயினும் முழுமையான ஆத்மீக - சமூகத் தலைவருக்குரிய ஆளுமை நிறைந்த தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் நல்ல ஆரோக்கியமும் ஆயுளும் பெற்றுத் தம் சேவையைத் தொடர 'முரசொலி' பிரார்த்திப்பதுடன் அன்புடன் வாழ்த்துகிறது.

# 38 கிலோ கஞ்சாவுடன் தமிழ் வர்த்தகர் கைது

கடந்த வியாழக்கிழமை கொழும்பு திம்பிரிகஸ்யாயில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இருந்து 10 லட்சம் ரூபா பெறுமதியான 38 கிலோ கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இக்கஞ்சா தமிழ் நாட்டிலிருந்து கடத்தி வரப்பட்டதாகவும், ஏற்கனவே ஹிரோயின் போதைப் பொருளுடன் கைதான இரு நபர்களின் தகவல்களையடுத்து இந்த வர்த்தகர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ் வைத்தியசாலைகளுக்கு அடுத்த வருடம் புதிய அம்புலன்ஸ்

யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அடுத்த வருடம் அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படும்.

இத் தகவலைச் சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் பாராளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

அம்பாறை, கல்முனை, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், பொத்துவில் பகுதி வைத்தியசாலைகளுக்கும் அடுத்த வருடம் அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கென பிறநாடுகளினால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டிகளில் சிலவே இங்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சங்கீத நடன ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ் கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் கடமை புரியும் சங்கீத நடன டிப்ளோமா ஆசிரியர்களைப் பட்டதாரி சம்பள விகிதத்தில் அமர்த்துவதற்கும் பட்டதாரிச் சம்பள விகிதத்திற்கு உரித்துள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு 1991-1-1 தொடக்கம் விசேடபடி 150/- வழங்குவதற்கும், நடவடிக்கை எடுப்பதற்காக இம்மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் கோட்டக் கல்விப் பணிமனைக்கு வருமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## கடற்புலி போட்டிகள்

கடற்புலிகளின் அனுசரணையுடன் ஒழுங்கிணைக்கப்பட்ட விளையாட்டுக் குழுவால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதிப் போட்டி ஒன்றில், குருநகர் பாடுமீன் அணி ஒரு கோலால் வெற்றி பெற்றது.

சனசமூக நிலையங்களுக்கிடையிலான போட்டியில் நாவாந்துறை ஜோன் கெனடி சனசமூக நிலைய அணி, தொடர்மாடி சனசமூக நிலைய அணியை ஆட்ட நேரம் முடிவடைந்த பின் கொடுக்கப்பட்ட பெனால்டி உதையில் 2:1 என்ற கணக்கில் கோல்களைப் பெற்று வெற்றிபெற்றது. (16)

# தபாலில் சவர்க்காரம் அனுப்பிய தபால் ஊழியர் மீது விசாரணை

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு சவர்க்காரங்களை தபால் பார்சல் மூலம் அனுப்பியதாக சந்தேகிக்கப்படும் சில தபால் திணைக்கள ஊழியர்கள் மீது விசாரணைகள் நடைபெற்று வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தபால் தலைமையகம் சுற்று நிருபம் மூலம் வடபகுதிக்கு பார்சல்கள் அனுப்ப வேண்டாம் என அறிவித்தும் இவர்கள் அதனை மீறிச் செயற்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்.

தென்பகுதியில் உள்ள தபால் நிலையங்களில் பணிபுரியும் வடபகுதியைச் சேர்ந்த தபால் அதிபர்கள் ஊழியர்கள் இவ்வாறு பார்சலில் சவர்க்காரங்களை அனுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

சிலர் தேயிலை, ரொபி, சம்போ, கடதாசி என்பனவற்றை அனுப்பியதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்தே தற்போது வடக்கே அனுப்பப்படும் தபால் பொதிகள் கொழும்பு துறைமுகத்தில் வெட்டிப்பார்க்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

இதில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தபால் ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (06)

# இரேக்கில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் முன்பு குவைத்தில் இருந்தவர்கள்

இரேக்க நாட்டில் இருந்து கடந்த வியாழக்கிழமை திருப்பி அனுப்பப்பட்ட 11 இலங்கை இளைஞர்களும் குவைத்தில் இருந்து யுத்தம் காரணமாக இரேக்கம் சென்றதாக விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

இரேக்க நாட்டில் இவர்கள் எவ்வித தொழில் ஆவணங்களும் இன்றி தொழில் புரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒருவர் தெகிவளையைச் சேர்ந்த சிங்களப் பெண் ஏனையோர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள்.

பாகிஸ்தான் பிரஜைகள் சிலரும் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டதாகவும், இவர்களும் இலங்கையர்களும் பாகிஸ்தான் விமானத்தில் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 08

## கருத்தரங்கு

ஊர்காவற்றுறை, வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகளின் தலைவர் செயலாளர்களுக்கு கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது.

சுழிபுரம் யோருட் பயிற்சி நிலையத்தில் 24.12.91 காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இக்கருத்தரங்கில் மதுவிலக்கல், சமாதானம், போதைப்பொருள் பாவனைத் தடுப்பு போன்ற விடயங்கள் விவாதிக்கப்படவுள்ளன.

மேற்படி கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் 21ஆம் திகதி நண்பகலுக்கு முன்னர் தம்மிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் சுழிபுரக்கிளை கோருகிறது.

## அதிபர்களுக்கு

1992 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டங்களை ஆராயுமுகமாக சகல கோட்டத்திலுமுள்ள கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும் பின்வரும் திகதியடிப்படையில் கோட்ட ரீதியாக தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளார்கள்.

யாழ் கல்விக் கோட்டம் இன்று 19 ஆம் திகதி 9மணிக்கு யாழ் சாதன பாடசாலை மண்டபத்திலும், மருதானமடம் கல்விக்கோட்டம் இன்று 19 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும், பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம் 20 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திலும், தென்மராட்சிக் கல்விக் கோட்டம் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு டிரேபல் கல்லூரி மண்டபத்திலும், வடமராட்சிக் கல்லூரிக் கோட்டம் 21 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு வடஇந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும்.

## பாஜ் மூழ்கியது

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று முன்தினம் கப்பலில் இறக்கி கரைக்கு ஒரு பாஜ்ஜில கொண்டு வரப்பட்ட உரம் கடல் கொந்தளிப்பு காரணமாக கடலில் மூழ்கிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. 06

பண்டிவிரிச்சான்……

கோரிக்கையடங்கிய மகஜர் யாழ் அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரிடம் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஊர்வலம், கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதி, கோயில் வீதியூடாக சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினை நோக்கிச் சென்று சர்வதேசபிரதிநிதியிடமும் மற்றொரு மகஜர் கையளிக்கப்பட்டதையடுத்து மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் கோயில்வீதியூடாக யாழ் பல்கலைக்கழகத்தினை நோக்கிச் சென்றது.

மாணவர்கள் எழுப்பிய கோஷங்கள்

சார்க்மாநாடு தமிழினப் படுகொலையின் கொண்டாட்டமா?, மனித உரிமை உலகமே கண் விழித்துப்பார், அன்று வங்காலை இன்று பண்டிவிரிச்சான். அரசியல் சாசனம் வெளுத்த சாசனமா?, ஊர்வலம் நமக்கில்லை போர் முனைவரை செல்வோம் மேற்குறிப்பிட்ட கோசங்களுடன் இராணுவத்தினர் மாணவர்களின் கழுத்தினை இருகரங்கள் கொண்டு நசுக்கும் ஓவியப் படங்களும் ஏந்திச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

மகஜர்கள் பிரிட்டன், சுவிடன், அவுஸ்திரேலியா, நோர்வே போன்ற தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர். 7-4)

மறைத்து…

இறையிடம் முறைப்பாடு செய்துள்ளார்

தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (43)

கடலில்…

ஆறு பேரும் தற்போது பலாலி இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் கைது செய்யப்படுகிறவர்கள் தீவிரவாத சந்தேக நபர்கள் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (07)

அரச…

மாதங்களில் பரவலாக மனித உரிமை மீறப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டு அரசு பகிரங்க அறிக்கை வெளியிட வேண்டும் என்பதாகும்.

இது விடயத்தில் இனநாயகத்தையும், ஒற்றுமையையும் பாதுகாக்க படையினர் மனித உரிமையை மீறியிருக்கலாம். ஆனால் படையினர் மட்டுமே மனித உரிமையை மீறவில்லை என்பதே அரசின் நிலைப்பாடாகும். விசாரணையில் சில படையினர் குற்றவாளிகளாகக் காணப்பட்டமையும் அரச சார்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

மன்னிப்புச் சபையின் மற்றுமோர் சிபார்சு, சகல சந்தர்ப்பங்களிலும் படைகள் மனித உரிமையை பாதுகாக்கும் படி அரசு, தனது படைகளுக்கு தெளிவான கடும் வார்த்தைகளிலான உத்தரவுகளை வெளியிட வேண்டும் படையினர் இதைக் கடைப்பிடிக்கின்றனரா என அறிய கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும் என்பதாகும், இதை அரசு ஏற்றுள்ளதாக பிரட்மன் தெரிவித்தார்.

மற்றைய மூன்று சிபார்சுகளான கொந்தளிப்பு பகுதிகளுக்கு பாதுகாப்பு சேவை அதிகாரிகளும் கிரமமாக சென்று படையினரை சந்திக்க வேண்டும் என்பதும், தற்போது நீதி மன்றங்களில் உள்ள அரச படைகள் சம்பந்தமான குற்ற விசாரணைகளை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுமான சிபார்சுகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் மன்னிப்புச்சபையின் சிபார்சுகள் தொடர்பாக எழும் நெருக்குதல்களை சமாளிக்கவே ஸ்ரீலங்கா அரசு மனித உரிமை தொடர்பாக சிறிது தளர்வை காட்டுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது,

வவுனியா –

முடித்து வெளியேறும் தாதிமாரிலிருந்து சிலரை இங்கு நியமிப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர், 06

அரசின்…

பலப்படுத்திக்கொள்வர், இது ஆபத்தானது எனவும் அப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்

இதேசமயம் இவ்வருடம் முடிவடைவதற்குள் வடக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற செய்தியை நிராகரித்து விட முடியாது எனவும் இராணுவ உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரேமா..

யுடன் நிறைவடைந்து விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாநாடு முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி பிரேமதாஸவும் இந்தியப்பிரதமர் நரசிம்மராவும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்

பண்டத்தரிப்பு…

மூலம் சரியான அளவில் தேங்காய் எண்ணெய் பாவனையாளர்களுக்கு கிடைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதல்…

படை ரோந்து அணிமீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்திய தையடுத்தே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தாக்குதல் நடாத்தியவர்களை படையினர் தேடியதாக கூட்டுப் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்,

தமிழகத்தில்…

இந்த நிலையில் இந்திரா காங்கிரசுடன் கூட்டு வைத்துக் கொள்ளும் ஒரு திராவிட பாரம்பரிய கட்சி இணைப்பு ஒரு பக்கமாகவும் ஜனதா தளம் போன்ற ஏனைய கட்சிகளோடு கூட்டு வைத்துக் கொள்ளும் அடுத்த திராவிட கட்சி இணைப்பு இரண்டாம் சக்தியாகவும் இருக்கும் அதேவேளை பாரதீய ஜனதாக் கட்சி மூன்றாவது சக்தியாகவும் மிளிர்வதற்கான முயற்சிகளில் அது முனைப்பாக ஈடுபட்டுள்ளமையும் மிகத் தெளிவாகத் தெரிகிறது இந்த மும்முனைப் போட்டியில் பி.ஜே.பி கட்சி தமிழக ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்று யாரும் கருதி விட முடியாது.

அதற்கு மாறாக ஆட்சியை அமைக்கும் சந்தர்ப்பம் இக்கட்சிக்கும் வலுவாகவே இருக்கப் போகிறது.

இதை உணர்ந்து திராவிட பாரம்பரியக் கட்சிகள் செயற்படா விட்டால் தமிழக ஆட்சியை அவை கோட்டை விடலாம்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கஸ்தூரியார் டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில்19·12·1991இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.